செ.வெ.எண்: 46 / பிப்ரவரி நாள்: 23.02.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறையின் சார்பாக பாதுகாப்பான உணவு - தயாரிப்பு, விநியோகம் மற்றும் நுகர்வு குறித்த பயிற்சி மற்றும் கருத்தரங்கினை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (23.02.2016) உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறையின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், பாதுகாப்பான உணவு - தயாரிப்பு, விநியோகம் மற்றும் நுகர்வு குறித்த ஒரு நாள் பயிற்சி மற்றும் கருத்தரங்கினைத் துவக்கி வைத்தார்.

கருத்தரங்கினைத் துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

உணவு வணிகத்தில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் நுகர்வோர்களுக்கு கலப்படமில்லாத பாதுகாப்பான உணவுப் பொருட்களை வழங்குவது முக்கிய கடமையாகும். உணவு பாதுகாப்பினை உறுதி செய்திடும் விதமாக உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 என்ற சட்டம் 05.08.2011 அன்று முதல் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இச்சட்டத்தின் கீழ் உணவு வணிகத்தில் ஈடுபடுபவர்கள் உணவுப் பாதுகாப்பு துறையின் கீழ் கட்டாயம் பதிவு மற்றும் உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் வியாபாரிகளிடையே பாதுகாப்பான உணவுப் பொருட்கள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தி, அவர்கள் தாமாகவே தரமான மற்றும் அறிவியல் அடிப்படையிலான உணவு உற்பத்தி செய்யும் விதமாகவும், நுகர்வோர் வாங்கி உண்ணும் உணவுப் பொருட்கள் எவ்வித சுகாதாரக் கேடும் இன்றி பாதுகாப்பான முறையில் வழங்கப்படுகிறது என்பதை உறுதி செய்திடும் விதமாகவும் இச்சட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுதவிர, உணவுப் பொருட்களின் தரத்தினை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட உணவுப் பகுப்பாய்வு கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. உணவுப் பாதுகாப்பு குறித்த குற்ற வழக்குகளுக்கு தீர்வு காண்பதற்காக தனி நீதிமன்றங்கள் மற்றும் மேல் முறையீட்டு முறைகளும் நடைமுறையில் உள்ளன. இப்பயிலரங்கில் கலந்து கொண்டுள்ள வியாபாரிகள் மற்றும் நுகர்வோர்கள் பாதுகாப்பான உணவுப் பொருட்கள் குறித்த தங்களது சந்தேகங்களை தெளிவுபடுத்தி பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பாதுகாப்பான உணவுப் பொருட்கள் குறித்து அமைக்கப்பட்டிருந்த விழிப்புணர்வு கண்காட்சியினைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட உணவுப் பாதுகாப்பு நியமன அலுவலர் மரு.எம்.ஜெகதீஷ் சந்திரபோஸ், வர்த்தக சங்க மாவட்ட செயலாளர்கள் திரு.ஆர்.எஸ்.ஒய்.ஜபருல்லாகான் (பரமக்குடி), திரு.குப்தா ஆர்.கோவிந்தராஜ் உட்பட அனைத்து வட்டார உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள், அரசு அலுவலர்கள், வியாபார சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் நுகர்வோர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**